**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சேந்தமங்கலம்.**

**முன்னிலை: சீ. ராஜ குமாரன் B.E. L.L.B.,**

**குற்றவியல் நீதித்துறை நடுவர், சேந்தமங்கலம்.**

**2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 01–ஆம் நாள் புதன்கிழமை**

**2057 வது திருவள்ளுவர் ஆண்டு,பராபவ ஆண்டு,ஆனி மாதம் 17ம் நாள்**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்: 176/2025**

**CNR No. TNNM14-000513-2025**

அரசுக்காக

காவல் ஆய்வாளர்,

மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு,

நாமக்கல். – குற்ற முறையீட்டாளர்

(குற்ற எண்.128/2025)

எதிர்

செல்வம், த/பெ. பெரியண்ண நாடார்,

4/177, பெரிய பள்ளம் பாறை,

சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல். – எதிரி

**( மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற R.O.C No. 814/2020/RG/F1. தேதி: 07.04.2021 உத்தரவு படி)**

<table>
<tr><td>1.</td><td>சம்பவ நாள்</td><td colspan="2">20.04.2025</td></tr>
<tr><td>2.</td><td>புகார் நாள் (குற்ற அறிக்கை தாக்கலான நாள்)</td><td colspan="2">16.07.2025</td></tr>
<tr><td>3.</td><td>எதிரி கைது செய்யப்பட்டு</td><td>எதிரி கைது செய்யப்பட்ட நாள்</td><td>பிணையில் சென்ற நாள்</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>பிணையில் சென்ற நாள்</td><td><table><tr><td>20.04.2025</td><td>20.04.2025</td></tr></table></td></tr>
<tr><td>4.</td><td>எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு</td><td>எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act r/w 4(1)(e) TNP Act 1937 ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டன.</td></tr>
<tr><td>5.</td><td>BNSS பிரிவு 263(2) ன் கீழான கேள்வி</td><td>09.01.2026</td></tr>
<tr><td>6.</td><td>எதிரியின் பதில்</td><td>பொய் வழக்கு</td></tr>
<tr><td>7.</td><td>வழக்கின் விசாரணை தொடங்கிய நாள்</td><td>24.03.2026</td></tr>
<tr><td>8.</td><td>சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td><table>
<tr><th>அரசு தரப்பு சாட்சிகள்</th><th>சாட்சிகளின் பெயர்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>மோகன்குமார்</td><td>24.03.2026</td><td>24.03.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>ரஞ்சித்குமார்</td><td>27.04.2026</td><td>27.04.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>சங்கரபாண்டியன்</td><td>24.06.2026</td><td>24.06.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>9.</td><td>வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள்</td><td>24.06.2026</td></tr>
<tr><td>10.</td><td>BNSS பிரிவு 351(1)(ஆ) ன் கீழான கேள்வி</td><td>25.06.2026</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 11. | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | 01.07.2026 |
| 12. | தீர்ப்பு | முடிவாக, எதிரி மீதான குற்றச் சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டுநிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act r/w 4(1)(e) TNP Act 1937 ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து BNSS பிரிவு 271(1) ன் கீழ்விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 13. | குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தீர்ப்பின் நகல் வழுங்கப்பட்ட நாள் | 01.07.2026 |
| 14. | காலதாமதத்திற்கான காரணம் | இல்லை. |

இந்த வழக்கானது 16.07.2025–ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு,அரசு தரப்பில் திருமதி. P. கவிதா, அரசு உதவி வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு. P. பாலகிருஷ்ணன், அவர்கள் முன்னிலையாகியும், 25.06.2026–ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது, இருதரப்பும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப் பட்டும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 20.04.2025ம் தேதி 10.00 மணிக்கு சேந்தமங்கலம் காவல் நிலைய சரகம் பெரியபள்ளம்பாறை தோட்டம் அருகே இவ்வழக்கின் எதிரி செல்வம் என்பவர் அரசு அனுமதியின்றி, பனை மரத்தில் இருந்து கள்ளை இறக்கி சுமார் 3 லிட்டர் விற்பனைக்காக வைத்திருந்ததாக எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act 2024 –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

2) இவ்வழக்கின் இறுதி அறிக்கை மற்றும் பிற ஆவணங்களின் பரிசீலனை செய்ததில் எதிரி மீது முதல் நிலை வழக்கு இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி இந்த வழக்கினை ஆண்டு பட்டிகை வழக்கு எண் 176/2025 ன் கீழ் கோப்புக்கு எடுத்துக்கொண்டு, எதிரிக்கு அழைப்பானை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பானையின் பேரில் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், அரசு தரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும், BNSS 230–வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டது.

3) வழக்கு ஆவணங்களின் நகல்களை எதிரி படித்துப் பார்க்கப் போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும், BNSS 193–ன் கீழ் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலித்து, எதிரி மீது சொல்லப்பட்டுள்ள குற்றம் குறித்து எடுத்துரைக்கப் போதுமான ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால், சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act r/w 4(1)(e) TNP Act 1937 –ன் கீழான குற்றச்சாட்டுகளின் சாராம்சம் குறித்து எதிரிக்கு எடுத்துரைத்து எதிரியிடம் வினவியபோது, எதிரி குற்றச்சாட்டுகளை

மறுத்து குற்றவாளி இல்லை என்றார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்க, அரசு தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.8** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

**5). அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:-**

**5.1. அ.சா.1 மோகன்குமார் தனது சாட்சியத்தில்,** கடந்த 20.04.2025ம் தேதி காலை 07.00 மணிக்கு காவல் ஆய்வாளர் திரு.சங்கரபாண்டியன் அவர்களின் வாய்மொழி உத்தரவுபடி தானும் தலைமை காவலர் திரு.விஜயகுமார் ஆகியோருடன் சேந்தமங்கலம் காவல்நிலைய சரகம் காளப்பநாயக்கன்பட்டி துத்திக்குளம் பெரியபள்ளம் பாறை ஆகிய மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு நடவடிக்கையாக ரோந்து பணியில் இருந்ததாகவும், காலை 10.00 மணிக்கு பெரியபள்ளம்பாறை செல்வம் என்பவர் தோட்டத்தில் சிவப்பு நிற பிளாஸ்டிக் குடத்தை வைத்துக்கொண்டு சுமார் 60 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் சந்தேகப்படும் வகையில் கையில் கள்ளை வைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்ததாகவும், ஆஜர் எதிரியை தாங்கள் பிடித்து விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் செல்வம் த.பெ.பெரியன்னநாடார் என்றும் தான் சட்டத்திற்கு புறம்பாக அரசு கள்ளை விற்பனைக்கு வைத்துள்ளதாக கூறியதாகவும், ஆஜர் எதிரி தான் வைத்திருந்த 5 லிட்டர் கொள்ளவு உள்ள சிவப்புநிற பிளாஸ்டிக் குடத்தை ஆய்வு செய்தபோது அதில் 3 லிட்டர் அளவு கள் இருந்ததாகவும், ஆஜர் எதிரி அந்த கள்ளை

விற்பனைக்காக வைத்திருப்பதாக கூறிதாகவும், எதிரி செல்வம் அவர் வைத்திருந்த குடத்தில் இருந்த கள்ளுடன் தான் தனது செல்போனில் புகைப்படம் எடுத்ததாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படம் தான் எடுத்ததுதான் என்றும், பின்னர் ஆஜர் எதிரி மற்றும் அவர் வைத்திருந்த கள்ளுடன் நிலையம் வந்து சம்பவம் தொடர்பாக தான் தனியறிக்கையுடன் எதிரி மற்றும் அவர் வைத்திருந்த கள்ளுடன் தலைமை காவலர் திரு.ரஞ்சித்குமார் அவர்களிடம் ஒப்படைத்ததாகவும், சம்பவம் தொடர்பாக நிலைய குற்ற எண்.128/2025 சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாகவும், வழக்கை தலைமை காவல் திரு.ரஞ்சித்குமார் தன்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 12.10 மணிக்கு ஆஜர் எதிரியை நிலையத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்ததாகவும், பின்னர் தலைமை காவலர் ஆஜர் எதிரியை விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் ஆய்வாளர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை தலைமை காவலர் திரு.விஜயகுமார் மற்றும் தனது முன்னிலையில் பதிவு செய்ததாகவும், ஆஜர் எதிரி செல்வம் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், பள்ளாம்பாறையை சேர்ந்தவர் என்றும் பனை மரத்தில் இருந்து கள்ளை இறக்கி விற்பனை செய்து வந்ததாகவும் தான் வைத்திருந்த கள்ளை விற்பனைக்கு வைத்திருந்ததாகவும் கூறியதாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், பின்னர் எதிரி விற்பனைக்காக வைத்திருந்த 5 லிட்டர் கொள்ளவு உள்ள சிவப்பு நிற பிளாஸ்டிக் குடத்தில் இருந்த 3 லிட்டர் கள்ளை அஜர் செய்தார் என்றும், அதை தலைமை காவலர் தங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம்

கைப்பற்றியதாகவும், அதில் தான் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும், பின்னர் அந்த கள்ளை அழித்தல் மகஜர் மூலம் கீழே ஊற்றி அழிக்கப்பட்டதாகவும், அழித்தல் மகஜருடன் கூடிய கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், பின்னர் 20.04.2025ம் தேதி தலைமை காவலர் திரு.விஜயகுமார் உடன் தானும் சம்பவ இடம் சென்றதாகவும், மாலை 15.00 மணிக்கு தலைமை காவலர் பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் தங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், அதில் தான் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும், பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ன் மூலம் புகைப்படம் அ.சா.ஆ1 ஆகவும், BSA பிரிவு 63(4)(c) ன் கீழான சான்றிதழ் அ.சா.ஆ.2 ஆகவும், தனியறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆகவும், அழித்தல் மகசருடன் கூடிய கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.5 ஆகவும், பார்வை மகசர் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யபட்டது.

**5.2. அ.சா.2 ரஞ்சித்குமார் தனது சாட்சியத்தில்,** தான் கடந்த 20.04.2025ம் தேதி காலை 11.30 மணிக்கு நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் நிலைய பொறுப்பில் இருந்த போது தலைமை காவலர் திரு.மோகன்குமார் வழக்குச்சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் ஆஜராகி கொடுத்த தனியறிக்கையின் பேரில் நிலைய குற்ற எண். 128/2025 u/s. 4(1)(C) of TNP Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கையின் அசலை தனியறிக்கையுடன் சேர்த்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலை உரிய

அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து மற்றொரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு. சங்கரபாண்டியன் அவர்களின் பார்வைக்கு வைத்தேன் என்றும், இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 ன் மூலம் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**5.3. அ.சா.3 சங்கரபாண்டியன் தனது சாட்சியத்தில்,** தான் கடந்த 2025 முதல் 2026ம் வருடம் வரை நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்ததாகவும், கடந்த 20.04.2025ம் தேதி காலை 07.00 மணிக்கு தனது வாய்மொழி உத்தரவுபடி தலைமை காவலர் திரு.மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு.விஜயகுமார் ஆகியோர் சேந்தமங்கலம் காவல்நிலைய சரகம் காளப்பநாயக்கன்பட்டி துத்திக்குளம் பெரியபள்ளம் பாறை ஆகிய மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு நடவடிக்கையாக ரோந்து பணியில் இருந்தபோது காலை 10.00 மணிக்கு பெரியபள்ளம்பாறை செல்வம் என்பவர் தோட்டத்தில் சிவப்பு நிற பிளாஸ்டிக் குடத்தை வைத்துக்கொண்டு சுமார் 60 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் சந்தேகப்படும் வகையில் கையில் கள்ளை வைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்தவரை பிடித்து விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் செல்வம் த.பெ.பெரியன்னநாடார் என்றும் தான் சட்டத்திற்கு புறம்பாக அரசு கள்ளை விற்பனைக்கு வைத்துள்ளதாக கூறியதால் ஆஜர் எதிரி மற்றும் அவர் வைத்திருந்த கள்ளுடன் நிலையம் வந்து சம்பவம் தொடர்பாக தலைமை காவலர் திரு.மோகன்குமார் தனியறிக்கையுடன் எதிரி மற்றும் அவர் வைத்திருந்த கள்ளுடன் தலைமை காவலர் திரு.ரஞ்சித்குமார் அவர்களிடம் ஒப்படைத்தார் என்றும், தலைமை காவலர் திரு.ரஞ்சித்குமார் மேற்படி தனியறிக்கையின் பேரில் சம்பவம் தொடர்பாக நிலைய குற்ற எண்.128/2025 சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் முதல்

தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்காக வழக்கு கோப்புகளை எனது பார்வைக்கு வைத்தார் என்றும், தான் வழக்கை தன்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 12.10 மணிக்கு ஆஜர் எதிரியை நிலையத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்தேன் என்றும், பின்னர் ஆஜர் எதிரியை விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை தலைமை காவலர் திரு.மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்ததாகவும், ஆஜர் எதிரி செல்வம் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், பள்ளாம்பாறையை சேர்ந்தவர் என்றும் பனை மரத்தில் இருந்து கள்ளை இறக்கி விற்பனை செய்து வந்ததாகவும் தான் வைத்திருந்த கள்ளை விற்பனைக்கு வைத்திருந்ததாகவும் கூறியதாகவும், பின்னர் எதிரி விற்பனைக்காக வைத்திருந்த 5 லிட்டர் கொள்ளவு உள்ள சிவப்பு நிற பிளாஸ்டிக் குடத்தில் இருந்த 3 லிட்டர் கள்ளை அஜர் செய்ததாகவும், அதை தலைமை காவலர் திரு.மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியதாகவும், பின்னர் அந்த கள்ளை அழித்தல் மகஜர் மூலம் கீழே ஊற்றி அழித்ததாகவும், கள்ளை அழிக்கும்போது தலைமை காவலர் திரு.மோகன்குமார் புகைப்படம் எடுத்ததாகவும், பின்னர் 20.04.2025ம் தேதி தலைமை காவலர் திரு.மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு.விஜயகுமார் ஆகியோர் உடன் சம்பவ இடம் சென்றதாகவும், மாலை 15.00 மணிக்கு பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் தலைமை காவலர் திரு.மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், பின்னர் தலைமை

காவலர் திரு.மோகன்குமார், தலைமை காவலர் திரு.விஜயக்குமார் மற்றும் தலைமை காவலர் திரு.ரஞ்சித்குமார் ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 ன் மூலம் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டது.

6) இவ்வழக்கில், அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு எதிராக தோன்றும் சாட்சிகளின் சாட்சியம் குறித்து, எதிரியிடம் BNSS 351(1) (ஆ)–ன் படி எடுத்துரைக்க, எதிரி பொய் சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை எனக் கூறியதன்பேரில், எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. இரு தரப்பும் கேட்கப்பட்டது.

7) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

8) அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், அ.சா.ஆ1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு உரிய தண்டடைன வழங்குமாறு வாதிடப்பட்டது.

9) எதிரி தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் இவ்வழக்கில் வழக்கு சம்பவம் நடக்கவில்லை என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை

வழக்கு குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்யவேண்டுமென வாதிட்டார்.

10.1. இவ்வழக்கில் எதிரி கடந்த 20.04.2025ம் தேதி காலை 10.00 மணிக்கு பெரியபள்ளம் பாரை செல்வம் என்பவரது தோட்டத்தில் சட்டத்திற்கு புறம்பாக 3 லிட்டர் கள்ளை இறக்கி கள்ளத்தனமாக விற்கவைத்திருந்ததாக எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

10.2. அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை கவனமாக ஆராயும் போது, இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 காவல் ஆய்வாளர் திரு. சங்கரபாண்டியன் தனது சாட்சியத்தில் அ.சா.1 மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு. விஜயகுமார் ஆகியோருடன் மதுவிலக்கு மற்றும் குற்றத்தடுப்பு நடவடிக்கையாக ரோந்து பணியில் இருந்த போது பெரியபள்ளம் பாரை செல்வம் என்பவரது தோட்டத்தில் எதிரி சிவப்பு நிற பிளாஸ்டிக் குடத்துடன் நின்று கொண்டிருந்ததாகவும், அவரிடம் விசாரித்த போது, எதிரி தானாக முன் வந்து தான் சட்டத்திற்கு புறம்பாக கள் இறக்கி விற்க வைத்தருந்ததாகவும், தான் வைத்திருக்கும் சிவப்பு நிற பிளாஸ்டிக் குடத்தில் கள் இருப்பதாகவும் கூறியதன் பேரில் எதிரியை அ.சா.3 காவல் ஆய்வாளர் திரு. சங்கரபாண்டியன் கைது செய்ததாகவும், பின்பு எதிரி தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், பின்பு எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அ.சா.3 காவல் ஆய்வாளர் திரு. சங்கரபாண்டியன் பதிவு செய்து அதன் தொடர்ச்சியாக எதிரி ஆஜர் செய்த 5 லிட்டர் கொள்ளளவு உள்ள சிவப்பு நிற பிளாஸ்டிக் குடத்தில் இருந்த 3 லிட்டர் கள்ளை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், பின்னர் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட கள்ளை அழித்தல் மகசர் தயார் செய்து அழித்ததாகவும், பின்பு அ.சா.3 காவல் ஆய்வாளர் திரு. சங்கரபாண்டியன் அன்றைய தினமே மாலை 15.00 மணிக்கு அ.சா.1

மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு. விஜயகுமார் ஆகியோர்களுடன் சம்பவயிடத்திற்கு சென்று சம்பவயிடத்தை பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**10.3.** இவ்வழக்கின் அ.சா.3 திரு. சங்கரபாண்டியன் தனது சாட்சியத்தில், எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அ.சா.1 மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு. விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து மேற்படி வழக்கு சொத்துகளை கைப்பற்றி அழித்ததற்கு பின்பு அன்றையதினமே மாலை 15.00 மணிக்கு சம்பவயிடம் சென்று அ.சா.1 மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு. விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பின்பு எதிரி மீது சட்டப்பிரிவு **4(1)(C) TNP Act** ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**10.4.** இவ்வழக்கில் அ.சா.1 மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு. விஜயகுமார் ஆகியோர் எதிரியை பெரியபள்ளம்பாறை செல்வம் என்பவரது தோட்டத்தில் பிடித்ததாக கூறும் நிலையில் மேற்படி செல்வம் என்பவரை வழக்கின் சாட்சியாக அரசுதரப்பில் விசாரிக்கவில்லை. மேலும், சம்பவயிடமானது செல்வம் என்பவரது தோட்டம் தானா என்பதை நிரூபிக்கும் வகையில் ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை.

**10.5.** இவ்வழக்கில் அ.சா.3 திரு. சங்கரபாண்டியன் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். ஆனால், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் புதிய பொருண்மைகள் எதுவும் கண்டறியப்பட்டு சான்றிடப்படவில்லை. எனவே, பாரதிய சாட்சிய அதிநயம் பிரிவு 23 ன் கீழ் போலீசாரிடம் கொடுக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தை

அந்த வழக்கின் எதிரிக்கு எதிராக பயன்படுத்த இயலாது. எனவே, இவ்வழக்கில் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் புதிய பொருண்மைகள் கண்டறியப்பட்டு சான்றிடப்படாததால் எதிரி போலீசாரிடம் கொடுத்ததாக சொல்லப்படும் வாக்குமூலத்தை எதிரிக்கு எதிராக பயன்படுத்த இயலாது.

**10.6.** இவ்வழக்கில் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரிக்கு எதிராக பயன்படுத்த இயலாது என்ற நிலையில் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க இவ்வழக்கில் எதிரியிடமிருந்து கள்ளை கைப்பற்றியதாக கூறப்படும் கைப்பற்றுதல் மகசரை நிரூபித்தல் அவசியமாகும்.

**10.7.** தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு 32 ன் கீழ் மேற்படி சட்டத்தின் கீழ் ஏதேனும் கள்ளை கைப்பற்றும் போது, அந்த கள்ளை வைத்திருக்க பயன்படுத்திய உபகரணத்தை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும். ஆனால், இவ்வழக்கில் எதிரியிடமிருந்து சுமார் 5 லிட்டர் பிடிக்கக்கூடிய சிவப்பு நிற பிளாஸ்டிக் குடத்தில் சுமார் 3 லிட்டர் பனங்கள் கைப்பற்றப்பட்டதாக கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும், அழித்தல் மகசரில் சுமார் 3 லிட்டர் பனங்கள்ளை கொட்டி அழிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் இவ்வழக்கில் மேற்படி 5 லிட்டர் கொள்ளளவு உள்ள சிவப்பு நிற பிளாஸ்டிக் குடத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. மேற்படி கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றப்பட்ட பொருட்களை நீதிமன்றத்தில் முறையாக ஒப்படைக்காத நிலையில் எதிரியிடமிருந்து கள் கைப்பற்றப்பட்டது என்ற பொருண்மை கேள்விக்குள்ளாகிறது.

**10.8.** இவ்வழக்கில் அ.சா.3 திரு. சங்கரபாண்டியன் தனது புலன் விசாரணையின் போது எதிரியை சம்பவயிடத்தில் வைத்து பிடித்ததாக சொல்லப்படும் அ.சா.1 மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு.

விஜயகுமார் ஆகியோரது முன்னிலையிலேயே எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து பின்னிட்டு அதே சாட்சிகளின் முன்னிலையில் மேற்படி எதிரி ஆஜர் செய்த கள்ளை கைப்பற்றியதாகவும், பின்னர் அதே சாட்சிகளின் முன்னிலையில் மேற்படி கள்ளை அழித்ததாகவும் பின்பு அன்றைய தினமே மாலை 15.00 மணிக்கு சம்பவயிடம் சென்று மேற்படி சாட்சிகளான அ.சா.1 மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு. விஜயகுமார் ஆகியோர் முன்னிலையிலேயே சம்பவயிடத்தை பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.3 ன் சாட்சியத்திலிருந்து இவ்வழக்கில் அ.சா.1 மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு. விஜயகுமார் ஆகிய இருவரின் முன்னிலையிலேயே ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகசர், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டதாக அரசுதரப்பு வழக்கு உள்ளது.

10.9. இவ்வழக்கில் அ.சா.ஆ.8 மாதிரி வரைபடத்தை கவனமாக ஆராயும் போது, சம்பவயிடமானது பெரியபள்ளம் பாரை செல்வம் என்பவரது தோட்டத்திற்கு அருகே கருப்பண்ணன் மாந்தோப்பு, செல்வம் மெத்தை வீடு, செல்வம் தோட்டம் மற்றும் சேந்தமங்கலம் டு பெரியபள்ளம்பாறை செல்லும் தார் சாலை அமைந்து உள்ளது என்பது தெரியவருகிறது. இவ்வாறான நிலையில் அ.சா.3 காவல் ஆய்வாளர் திரு. சங்கரபாண்டியன் தனி நபர் சாட்சிகள் யாரும் அல்லாமல் மேற்படி அ.சா.1 மோகன்குமார் மற்றும் தலைமை காவலர் திரு. விஜயகுமார் ஆகியோரை மட்டுமே முன் நிறுத்தி முழு வழக்கையும் புலன் விசாரணை செய்திருப்பது ஏற்கத்தக்கதல்ல.

10.10. மேலும் இவ்வழக்கில் எதிரியை கள்ளுடன் புகைப்படம் எடுத்ததாக அ.சா.1 சாட்சியமளித்து மேற்படி புகைப்படமானது அரசுதரப்பில் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 புகைப்படத்தை

கவனமாக ஆராயும் போது வெள்ளை நிற திரவத்தை கீழே ஊற்றுவது போல் புகைப்படமானது உள்ளது. இருப்பினும், இவ்வழக்கில் எதிரியிடமிருந்து கள்ளை கைப்பற்றியதாக சொல்லப்படும் கைப்பற்றுதல் மகசரானது நிரூபிக்கப்படாத நிலையில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட கள்ளை தான் எதிரி கீழே ஊற்றி அழிக்கிறார் என முடிவு செய்ய இயலாது. எனவே, அ.சா.ஆ.1 புகைப்படத்தை மட்டுமே வைத்துக்கொண்டு எதிரி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக அறுதியிட்டு கூற இயலாது.

**11)** அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை மிககவனத்துடன் பரிசீலிக்கும் போது அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கபடவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**12) முடிவாக,**

முடிவாக, எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீதான சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act r/w 4(1)(e) TNP Act 1937 ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து BNSS பிரிவு 271(1) ன் கீழ் எதிரியை குற்றவாளி இல்லை என முடிவு செய்து விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகள் எதுவும் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை. எனவே, வழக்கு சொத்துகள் குறித்து உத்தரவு இல்லை. எதிரி எழுதி கொடுத்த பிணைய பத்திரங்கள் இவ்வழக்கு மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு தானாக ரத்தாகி விடும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026-ஆம் ஆண்டு ஜூலை மாதம்**

**01–ஆம் நாள் புதன்கிழமை** ஆகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.07.01 11:31:16 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

**அரசு தரப்பு சாட்சிகள்–**

| **வரிசை எண்** | **சாட்சிகளின் வரிசை** | **சாட்சிகளின் பெயர்** | **சாட்சிகளின் பங்கு** |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | மோகன்குமார் | புகார்தாரர் |
| 2. | அ.சா.2 | ரஞ்சித்குமார் | தலைமை காவலர் |
| 3 | அ.சா.3 | சங்கரபாண்டியன் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்–**

| **வரிசை எண்** | **ஆவணங்களின் வரிசை** | **ஆவணங்களின் பெயர்** | **ஆவணங்கள் யாரால் குறியீடு செய்யப்பட்டது** |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | புகைப்படம் | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | BSA பிரிவு 63(4)(c) ன் கீழான சான்றிதழ் | அ.சா.1 |
| 3. | அ.சா.ஆ.3 | தனியறிக்கை | அ.சா.1 |
| 4 | அ.சா.ஆ.4 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் | அ.சா.1 |

| | | | |
|---|---|---|---|
| 5 | அ.சா.ஆ.5 | அழித்தல் மகசருடன் கூடிய கைப்பற்றுதல் மகசர் | அ.சா.1 |
| 6 | அ.சா.ஆ.6 | பார்வை மகசர் | அ.சா.1 |
| 7 | அ.சா.ஆ.7 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |
| 8 | அ.சா.ஆ.8 | மாதிரி வரைபடம் | அ.சா.3 |

**<u>அரசுத் தரப்பு சான்று பொருள்–</u>** இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் –</u>**

இல்லை.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.07.01 11:31:23 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

**<u>குறிப்பு–</u>**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நீதிமன்றக் காவலில் இல்லை.
2. வழக்கின் முடிவு இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. எந்த சாட்சிகளும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.07.01 11:31:28 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

<u>CASE SUMMARY</u>

**<u>CC-176/2025, Cr.No.128/2025</u>**
(CNR.No. TNNM-14-000513-2025)
<u>PEW NAMAKKAL</u>

| S.No | Particulars | Purpose |
|---|---|---|
| i | The period of remand of the accused | - |
| ii | The date of filing of the Complainant/Final report in | 16.07.2025 |

| | | |
|---|---|---|
| | the Court | |
| iii | The date of Committal of the case to the Court of Session | NIL |
| iv | The date of questioning of the accused as the case may be | 09.01.2026 |
| v | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions under Section 355 of the BNSS | NIL |
| vi | Date of Examination in-chief and cross-examination of a witness | <table><tr><td>Witness examined as</td><td>Date of Chief Examination</td><td>Date of Cross Examination</td></tr><tr><td>PW1-Mohankumar</td><td>24.03.2026</td><td>24.03.2026</td></tr><tr><td>PW2-Ranjithkumar</td><td>27.04.2026</td><td>27.04.2026</td></tr><tr><td>PW3-Sangarapandiayn</td><td>24.06.2026</td><td>24.06.2026</td></tr></table> |
| vii | Date of examination of the accused under section 351(1)(b) of the Code | 25.06.2026 |
| viii | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; | NIL |
| ix | Grant of stay by superior Courts and the results thereof | NIL |

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.07.01 11:31:34 +0530

Judicial Magistrate,
Sendamangalam.